**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM.**

| | | |
|---|---|---|
| **MCOP No. 132/2023** | **நாள் – 04.08.2026** | **சாட்சி –ம.சா.–1** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. நடராஜ்குமார் | தந்தை பெயர் | திரு. கார்த்திகேயன் |
| ஊர் | **திருநாகேஸ்வரம்** | தாலுக்கா | **கும்பகோணம்** |
| தொழில் | **தனியார் வங்கியில் பணி** | வயது | 25 |

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1) ம.சா.ஆ–1 – 01.03.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல்

2) ம.சா.ஆ–2 – 26.02.2023 தேதியிட்ட கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல்

3) ம.சா.ஆ–3 – 26.02.2026 தேதியிட்ட தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் வழங்கப்பட்ட சான்று அசல்

4) ம.சா.ஆ–4 – 17.03.2023 தேதியிட்ட பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல்

5) ம.சா.ஆ–5 – 12.04.2023 தேதியிட்ட பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று பதிவிறக்க நகல்

6) ம.சா.ஆ–6 – 03.04.2023 தேதியிட்ட TN68 AB 8822 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்க நகல்

7) ம.சா.ஆ–7 – 10.02.2020 தேதியிட்ட TN68 AB 8822 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று பதிவிறக்க நகல்

8) ம.சா.ஆ–8 – 24.01.2020 தேதியிட்ட TN68 AB 8822 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பாலிசி சான்று பதிவிறக்க நகல்

9) ம.சா.ஆ.9 – 24.07.2023 தேதியிட்ட திருநீலக்குடி காவல்நிலைய குற்ற எண்.172/2023 என்ற குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கை பதிவிறக்க நகல்

10) ம.சா.ஆ.10 – மனுதாரர் பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை எடுத்துகொண்டதற்கான மருந்து சீட்டுகள் அசல் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

11)ம.சா.ஆ.11 – மனுதாரர் பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் பல் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை எடுத்துகொண்டதற்கான மருந்து சீட்டுகள் அசல் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

12) ம.சா.ஆ.12 – மனுதாரருக்கு சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட சி.டி. ஸ்கேன் ரிப்போர்ட் அசல்

13) ம.சா.ஆ–13 – மனுதாரருக்கு சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட லேப் ரிப்போர்ட்ஸ் அசல் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

14) ம.சா.ஆ.14 – மனுதாரர் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான மருந்து பில்கள் கூடுதல் தொகை ரூ.68,074/– அசல் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

15) ம.சா.ஆ.15 – மனுதாரருக்கு சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட எக்ஸ்ரேஸ் அசல்

16) ம.சா.ஆ–16 – மனுதாரரின் ஆதார் அட்டை ஒப்பீட்டு நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

17) ம.சா.ஆ.17 – மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ஒப்பீட்டு நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

**நீ.ம.சா.ஆ-1 - மருத்துவ குழுமம் வழங்கிய சான்று**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

விபத்து நடந்த தேதி, மாதம், வருடம் என்னவென்றால் 26.02.2023 ஆகும். விபத்து சமயத்தில் நான் எங்கு வேலை பார்த்தேன் என்றால் சிஸ்கோ கம்பெனியில் வேலை பார்த்தேன். அவ்வாறு மேற்கண்ட கம்பெனியில் வேலை பார்த்தேன் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மாதம் ரூ.25,000/– வருமானம் ஈட்டி வந்தேன் என்று குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் சிஸ்கோ கம்பெனியில் வழங்கிய வருமான சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றாலும், அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், என்னை பொறுத்தமட்டில் அவை சரிதான் என்றாலும் சரிதான். நான் தற்பொழுது அதே நிறுவனத்தில் வேலை பார்க்கிறேனா என்றால் இல்லை. நான் வீட்டில் இருக்கிறேன். எனது பெற்றோர் வேலை செய்கிறார்களா என்றால் இருவரும் இறந்து விட்டனர். எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் அதனை விற்று விட்டோம். மேற்கண்ட விற்ற பணத்தைக் கொண்டு நான் வியாபாரம் அல்லது தொழில் செய்து வருகிறேனா என்றால் அந்த பணத்தை வைத்துதான் சிகிச்சைக்காக செலவு செய்தேன். மேற்கண்ட வீட்டை விற்ற பணத்தை முழுவதும் சிகிச்சைக்கு செலவு செய்து விட்டேனா என்றால் முழுவதையும் செலவு செய்து இன்னும் கடன் உள்ளது. எவ்வளவு கொடுத்தேன் என்றால் ரூ.3,00,000/–ற்கு விற்றேன். அவ்வாறு வீட்டை விற்றதற்கான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வீடானது யார் பெயரில் இருந்தது என்றால் எனது தாயார் பெயரில்இருந்தது. எனது

பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான்மட்டும்தான். எப்போது வீட்டை விற்றேன் என்றால் 2 வருடங்களுக்கு முன்பு விற்றேன். 2024 அல்லது 2025ல் விற்றேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் ஏடீஎம் –ல் பணம் நிரப்பும் பணி செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் சென்ற வாகனத்தை யார் ஓட்டிச் சென்றது என்றால் நான்தான் ஓட்டிச் சென்றேன். காவல்துறையில் யார் புகார் கொடுத்தது என்றால் எனது சித்தப்பா புகார் கொடுத்துள்ளார். விபத்து குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் விபத்து நடந்த பிறகு 2 நாட்கள் வரை நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன். அதன்பிறகு காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்டிருந்தபோது காவல்துறையினர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சுய நினைவு வந்தபிறகும் மருத்துவமனையில் காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது 26.02.2023 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை விபத்து நடந்து 4 நாட்கள் கழித்து 01.03.2023 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராம்குமார் என்பவர் யார் என்றால் எனது சித்தப்பா ஆவார். விபத்தின்போது எனது சித்தப்பா உடன் இல்லை என்றால் சரிதான். அதனால் என் சித்தப்பாவிற்கு விபத்து நடந்த விதம் குறித்து நேரடியாக தெரியாது என்றால்சரிதான். 2 நாட்கள் கழித்து எனக்கு சுயநினைவு வந்தவுடன் எனது சித்தப்பாவிடம் விபத்து நடந்த விதம் குறித்து கூறினேனா என்றால் அவ்வாறு கூறினேன். எனக்கு சுயநினைவு வந்தவுடன் எனது சித்தப்பாவிடம் விபத்து நடந்தது குறித்து கூறிய விவரங்களை வைத்து அவர் புகார் கொடுத்தாரா என்றால் அவ்வாறு நான் கூறியபோது அதற்கு முன்னரே அவர் புகார் கொடுத்துவிட்டதாக சொன்னார். விபத்து நடந்தவுடன் எனக்கு சுய நினைவு இல்லாமல் போய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 2 நாட்கள் கழித்துதான் கண் விழித்தேன் என்றால் சரிதான். விபத்து குறித்து எனது சித்தப்பாவிற்கு நான் சொல்லாமல் விபரங்கள் தெரிய வாய்ப்பு இல்லை என்றால் விபத்து நடந்த இடத்தில்

இருந்த அக்கம் பக்கத்தினர் விபரங்கள் சொல்லியதன் பேரில் எனது சித்தப்பாவிற்கு தெரியும். விபத்து நடந்த இடம் எங்கு என்றால் காரைக்கால் சாலையில் திருநாகேஸ்வரம் கச்சாகுளம் அருகில் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடத்தில் எனக்கு உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. விபத்து நடந்த காரைக்கால் சாலை என்பது அகலமான தார் சாலை என்றால் சரிதான். அகலமான தார் சாலை என்பதால் வாகனங்கள் செல்லவும், வரவும் வசதியாக இருக்கும் என்றால் சரிதான். திருநாகேஸ்வரத்தில் ராகு ஸ்தலம் என்ற கோவில் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்றது என்றால் சரிதான். அங்கு பக்கத்தில் உள்ள உப்பிலியப்பன்கோவில் பிரசித்தி பெற்ற ஸ்தலம் என்றால் சரிதான். மேற்கண்டகோவில்களுக்கு தமிழ்நாடு முழுவதும் பக்தர்கள் அதிகமாக வருவதால் அந்த சாலையானது எப்போதும் வாகன போக்குவரத்து மிகுந்து இருக்கும என்றால் சரிதான். பேருந்துகள் மேற்கண்டகோவில் ஸ்தலங்களுக்கு இயக்கப்படுகின்றன என்றால் சரிதான். போக்குவரத்து நெரிசல் இருப்பதால் இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்தில் இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன என்றால் சரிதான். நான் விபத்தின்போது மது அருந்தி இருந்தேனா என்றால் இல்லை. எதிரே வாகனத்தில் வந்தவரும் மது அருந்தி இருந்தாரா என்றால் தெரியவில்லை. பிறகு எதிரே வாகனத்தில் வந்தவர் மது அருந்தி இருந்தாரா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரே வந்தவர் மது அருந்தி இருந்ததாக மனுவிலும்,எனது பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. என்னையும், எதிரே வந்த வாகனத்தையும் தவிர விபத்தின்போது வேறு வாகனங்கள் அந்த இடத்தில் வந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்த நேரம் மதியம் 12.00 மணி என்பதால் விபத்து நடந்த சாலையானது விபத்தில் சம்பந்தப்பட்ட 2 வாகனங்களை தவிர வெறிச்சோடி இருந்தது என்றால் சரிதான். விபத்து

சமயத்தில் எனக்கு நன்றாக கண் தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்தது பகல் நேரம் என்பதால் எதிரே வரும் வாகனங்கள் நன்றாக அப்போது தெரியும் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல்துறையினர் வரைபடம் தயார் செய்துள்ளார்களா என்றால் அதுபற்றி தெரியவில்லை. விபத்திற்கு பிறகோ இன்றைய தேதி வரையோ காவல் துறையினர் வரைபடம் தயார் செய்தது குறித்து நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சென்ற வாகனம் எந்த வருடம் தயாரிப்பு என்றால் 2018 ஆகும். மேற்கண்ட வாகனத்தை தான் இன்றைய தேதிவரை ஓட்டி வருகிறேன் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு எத்தனை அடி தூரத்தில் எதிரே வரும் வாகனத்தை பார்த்தேன் என்றால் 20 அடி தூரத்தில் பார்த்தேன். 20 அடி தூரத்தில் எதிரே வரும் வாகனத்தை பார்த்ததாக சொல்லும்பட்சத்தில் மோதாமல் இருப்பதற்கு நான் முயற்சி செய்தேனா என்றால் இடது புறம் ஓரமாக ஒதுங்க பார்த்தேன். அதற்குள் விபத்து நடந்துவிட்டது. நான் 60 கி.மீ வேகத்தில் வந்திருப்பேனா என்றால் 40 கி.மீ. வேகத்தில் வந்தேன். நான் எதிரே வந்த வாகனத்தை பார்த்தபோதும் அதே வேகத்தில் வந்தேனா என்றால் வேகத்தை குறைத்தேன். வேகத்தை குறைத்ததாக சொல்லும் பட்சத்தில் பிரேக் அடிக்கவில்லையா என்றால் பிரேக் அடிக்கவில்லை, மற்றும் வேகத்தை குறைத்தேன். விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததா என்றால் ஓரியண்டல் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விபத்தின்போது நான் தலை கவசம் அணிந்திருந்ததாக புகாரிலோ, மனுவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் தலைகவசம் அணிந்திருந்தேன். தலைகவசம் அணிந்திருந்தால் மூக்கில் அடிபட்டிருக்காது என்றால் தலைகவசத்தின் முன்புறம் உள்ள கண்ணாடி பகுதியானது உடைந்து மூக்கில் அடிபட்டது. தலைகவசத்தில் கண்ணாடி பகுதி வராது என்றாலும், பிளாஸ்டிக் பகுதிதான் இருக்கும என்றாலும் சரிதான். அது கவர் பகுதி ஆகும்.அந்த பிளாஸ்டிக் பகுதியானது மெல்லியதாக

கண்ணில் தூசி படாமல் இருப்பதற்காக உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட பிளாஸ்டிக் பகுதியானது உடைந்து முக பகுதியில் குத்தும்பட்சத்தில் காயம் மட்டுமே ஏற்படும் என்றாலும், எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றாலும் சரிதான். எதிரே வந்த வாகனத்தின் ேஹன்பர் பகுதி மோதி எலும்பு முறிவு ஏற்பட்டது. எதிரே வந்த வாகனத்தின் ேஹன்பர் பகுதி மோதி எலும்பு முறிவு ஏற்பட்டதாக எனது முதல் விசாரணையிலோ, மனுவிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வேகமாக 2 வாகனங்கள் மோதிக் கொண்டால் மட்டுமே எலும்பு முறிவு ஏற்படும் என்றால் சரிதான். ஆனால் நான் மெதுவாக சென்றபோது எதிரே வந்த வாகனம் வேகமாக வந்து மோதியது. நான்தான் வலதுபுறம் திருப்பி எதிரே வந்த வாகனத்தின் மீது மோதியதாக காவல்துறை தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஆனால் நான் சரியாகத்தான் வந்தேன். எதிரில் வந்தவர் மெதுவாகத்தான் வந்தார் என்றாலும், நான்தான் அதிவேகமாக சென்று அவருடைய வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரே வந்தவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். எனக்கு எதிரே வந்தவருக்கும் விபத்தில் அடிபட்டது என்றால் இல்லை. அவருடைய வாகனத்திற்கு மட்டுமே சேதம் ஏற்பட்டது. எதிர்எதிரே இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் மோதிக் கொண்டால் இருவருக்கும் அடி பலமாக இருக்கும் என்றால் சரிதான். ஆனால் எதிரே வந்தவர் விபத்தில் மோதுவதற்கு முன்பாக வண்டியிலிருந்து குதித்து ஓடிவிட்டார். எதிரே வந்த வாகனம் இருசக்கர மோட்டார் வாகனமா என்றால் ஹீரோ ே ஹாண்டா வாகனமாகும். டிவிஎஸ் எக்ஸ்எல் , ஸ்கூட்டர் வாகனங்களில் இருந்து எளிதாக தப்பிக்க முடியும் என்றாலும் இருசக்கர மோட்டார் வாகனத்தில் இருந்து எளிதாக குதித்து தப்பிக்க முடியாது என்றால் சரிதான். எதிரே வந்தவர் எனக்கு தெரிந்தவரா அல்லது விரோதியா என்றால் அவரை எனக்கு தெரியாது. எதிரே வாகனத்தில் வந்தவர் என்மீது மோத வேண்டும் என்ற எண்ணத்தில் வராமல் எதிர்பாராமல்

மோதினார் என்றால் வேகமாக வந்து மோதினார். எதிரே வந்தவர் என்மீது மோத வேண்டும் என்ற எண்ணத்துடன் வராமல் எதிர்பாராமல் வந்தார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. எதிரே வந்தவர் விரோதத்துடன் மோதினாரா என்றால் இல்லை. எதிர்பாராமல் அவர் மோதினார் என்றால் சரிதான். எதிர் எதிரே மோதியதால் இருவர் மீதும்த வறு உள்ளது என்றால் சரியல்ல. தன்பால் கவனமின்மை விதியின்படி எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்த்து இழப்பீடு கோரியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்தை பொறுத்து நான் தவறு இழைத்தவன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ14 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக நான் எவ்வளவு ரூபாய் செலவு செய்துள்ளேன் என்றால் சிகிச்சைக்காக 3 முதல் 4 லட்சம் வரை செலவு செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மசாஆ14 ஆவணத்தில் மேற்கண்ட தொகை செலவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தில் காயங்கள் ஏற்பட்டு 3 வருடங்கள் ஆகி விட்டது என்றால் சரிதான். மசாஆ14யை தவிர வேற எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் விபத்தில் எங்கெங்கு அடிபட்டது என்றால் மூக்கு, தாடை, தலையின் பின்பகுதி, தோள்பட்டை, மற்றும் மூளை பகுதியின் அடியில் தாக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். இதை தவிர வேறு எந்த பகுதியிலும் அடிபடவில்லையா என்றால் பல் முழுவதும் கொட்டிவிட்டது. விபத்து நடந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் காயங்கள் அனைத்தும் சரியாகி இருக்கக்கூடும் என்றால் சரிதான். ஆனால் மூக்கில் நுகர முடியவில்லை. இந்த விபத்தானது நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றாலும் சரியல்ல. விபத்தை நானே வரவழைத்து கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் நான் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் அங்கு இலவச சிகிச்சை என்றால் நான் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று,

ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். ஜிப்மர் மருத்துவமனையில் இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் இல்லை. குறைவான தொகையில் சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் ஓரளவு குறைவான தொகையில் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்கண்ட மருத்துவமனைகளில் நான் சிகிச்சை பெற்ற பிறகு பெரும்பாலான உபாதைகள் சரியாகி விட்டது என்றால் சரிதான். மூக்கு பகுதி மற்றும் பல் பகுதியில் மட்டும் பிரச்சனை உள்ளது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகி விட்டதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.